தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3] | தி. பி. 2016 | சுறவம் 20, 22 | (2, 9-1986) | 65 காசுகள் | [இதழ் எண்: 69] | [பகுதி 51-52

தென்மொழி, தமிழ்நிலம் - இதழ்களின் மேல் தில்லி அரசு நேரடி நடவடிக்கை!

ஆசிரியர் பெருஞ்சித்திரனார் மேல் 12 குற்றச்சாட்டுகள்!

இந்திய அரசின் செய்தித்தாள் பேரவை வழி அறிக்கை!

14 நாளைக்குள் விடை தராவிடில் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பெறும் என எச்சரிக்கை!

இந்திய அரசின் செய்தி, ஒலி - ஒளி பரப்புத் துறைச் செயலர் குலட்டியின் குற்றச்சாட்டு!

தமிழ்நாட்டுப் பிரிவினைக் கருத்துகளைப் பெருஞ்சித்திரனார் மக்களிடம் தூண்டி வருகிறார்!

85-ஆம் ஆண்டு முழுவதும் வெளிவந்த தென்மொழி, தமிழ்நிலம் பாடல்கள், கட்டுரைக் கருத்துகள் சுட்டிக் காட்டப்பெற்றுள்ளன!

அண்மையில் நடுவணரசுச் செய்தி ஒலி-ஒளிபரப்புத்துறை அமைச்சகம், பாவலரேறு பெருஞ்சித்திரனார் மேலும், அவர் தென்மொழி, தமிழ்நிலம் ஆகிய இதழ்களில் எழுதிவரும் பாடல்கள், கட்டுரைகள், பேச்சுகள், நடவடிக்கைகள் ஆகியவற்றின் மேலும் நேரடி நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளது.

நடுவணரசுச் செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சகத்திலிருந்து, அரசுச் செயலர், திரு. சி.டி. குலட்டி (G- D. Gulati) இந்திய அரசின் செய்தித் தாள் பேரவை (Press Council of India) க்குக் கடந்த 17—1—1986 ஆம் பக்கல் எழுதிய குற்றச்சாட்டு மடலில், 'குறிப்பிடப்பெற்ற பின்வரும் இதழ்களின் கட்டுரைகள் பாடல்கள் இவற்றின் பகுதிகள் அவற்றைப் படிக்கின்றவர்களுக்கு, நாட்டுப் பிரிவினை உணர்வாளர்களைத் தூண்டுகின்ற வகையில் அமைந்துள்ளன. அவை தொடர்பாக, அமைச்சகச் செய்தித்தாள் பிரிவகம் போதிய கருத்துச் செலுத்தித் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

நடவடிக்கை எடுக்கவேண்டியனவாக அமைச்சகச் செயலர் குறிப்பிட்டுள்ள பகுதிகள் வருமாறு :

தென்மொழி :

1. சுவடி 21, ஓலை 10 (சூலை - ஆகத்து 85) அட்டைப் பாடல் : 'உரிமை ஒடுக்கமே, விடுதலை முழக்கம்'.

2 மேற்படி இதழ் பக்கம் 6: ''சிங்கள வெறியர்களால் கற்பழிக்கப் பட்ட ஒரு தோழியின் கடிதம்.''

3 மேற்படி இதழ் பக்கம் 17: வள்ளிக்கேள்வனின் பாடல்: 'மண்ணில் ஓங்குக உரிமை ஈழமே.'

4. சுவடி 21, ஓலை 10 (ஆகத்து - செப். 85) அட்டைப் பாடல் : 'வன்பு வடவரை நடுங்கிட வைப்போம்.'

5. சுவடி 21, ஓலை 12. அட்டைப் பாடல்: 'அரசியலைச் சாராமல் இனவியலால் ஒன்றுபடுக.'

தமிழ்நிலம் : இதழ் எண். 56. (28—4—85)

1. முகப்புக் கட்டுரை : இந்தக் கட்டுரையில், இலங்கை பற்றிய செய்திகளில் தமிழ்நாடு அரசு போதிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பது. இராசீவ் காந்தி செயவர்த்தனனுக்குத் துணை போகின்றார் என்ற பகுதிகளும் கரடிப்பட்டி. க. கண்ணன் எழுதிய கட்டுரைப் பகுதிகளும்.

2. இதழ் எண் : 61 (28—7—85)

'திம்புப்பேச்சில் தென்பில்லை' என்னும் முகப்புக் கட்டுரையும், 3 ஆம் பக்கத்தில் வெளிவந்த உ. த. மு க. மாநிலச் செயற்குழுக் கூட்டத்தில் பேசிய பேச்சுகளும்.

3. மேற்படி இதழ் : பக்கம் 5.

பக்கம் 5 இல் வெளிவந்த மலேசியா சுப. சிதம்பரம் அவர்களின் 'தமிழ்நாடும் தமிழீழமும் உடனே அமைந்தாக வேண்டும்' என்னும் மடலும், மடற் பகுதிகளும்.

4 தமிழ்நிலம், இதழ் எண் : 62. (11-8-85) முகப்புப் பக்கச்செய்தி. இதில் செயவர்த்தனவை இராசீவ் காந்தி நல்லவராக்கப் பார்க்கிறார்: தமிழர்களின் ஒரே போராட்டம், தமிழீழம் அல்லது தமிழ்நாட்டுப் போராட்டமே எனும் கருத்துகள்.

5 தமிழ்நிலம், இதழ் எண் : 66. (24-11-85) பக்கம் 2. 'குமுதத்திற்கு ஒரு மறுப்பு மடல்'-தி.மு.க பொதுச் செயலாளர், திரு. க, அன்பழகன் அவர்களின் பேச்சுப்பற்றி.

6 மேற்படி இதழ் பக்கம் 4: 'தந்தை பெரியாரின் தலையாய கொள்கை தனித்தமிழ்நாடு பெறுவதே'-கட்டுரை

7. மேற்படி இதழ், பக்கம் 4: 'தமிழகத் தலைவர்களே! தமிழ்நாட்டை அமையுங்கள்' எனும், மலேசியா சுப. சிதம்பரம் அவர்களின் மடல்.

இப் பன்னிரண்டு கட்டுரை, பாடல் பகுதிகளில் வெளியிடப்பெற்ற கருத்துகளின் மேலும், இவற்றை வெளியிட்ட இதழ்களாகிய தென்மொழி, தமிழ்நிலம் ஆகியவற்றின் ஆசிரியர்: பெருஞ்சித்திரனார் மேலும், 197[illegible] ஆம் ஆண்டு செய்தித் தாள்கள் பேரவைச் சட்டம் பிரிவு எண்: 14 தன்படி ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரணத்தை 14 நாள்களுக்குள் காட்டவேண்டும் என்றும், அவ்வாறு காரணம் காட்டாவிடத்து எவ்வகையான மறு அறிவிப்பும் இல்லாமல் மற்ற சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அறிக்கை வந்துள்ளது

இது தொடர்பாக ஆசிரியரின், சட்ட ஆய்வுக் குழு ஆராய்ந்து, தக்க விடையளிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. பிற செய்திகள் பின்னர் வரும்.

— நம் சிறப்புச் செய்தியாளர்.

அமெரிக்காவில் தமிழர் நிலை!

'வந்தவர்களை வாழவைக்கும் நாடு' -என்று குறிப்பிட்டு ஒரு நாட்டைச் சொல்ல வேண்டுமானால் அமெரிக்க நாடுதான் அத் தன்மையது: தங்கள் பண்ணைகளில் பணி செய்வதற்கென்று ஆப்பிரிக்காவிலிருந்து 'கருப்பர்களை'த் திரட்டிவந்தபின் அமெரிக்காவிற்கு ஐரோப்பியர்கள் பலரும்குடியேறலாயினர். 18-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சிக்குப்பிறகு உணவுத் தட்டுப்பாடு ஏற்படவே, பெரும்பாலான ஐரோப்பியர் அமெரிக்காவிற்குள் வந்தனர். மேலும் அரசியல் மாற்றங்கள் காரணமாகக் கம்போடியா, கியூபா, வியட்நாம் மக்களும் அந்நாட்டிற்குள் சென்றனர். இந்தியாவிலிருந்து, குறிப்பாகத் தென்னகத்திலிருந்து பலர் மருத்துவநிலையிலும், பொறியியல் நிலையினராகவும், அறிஞர்களாகவும் அழைக்கப்பெற்றுச் சென்றுள்ளனர்.

செல்வச் செழிப்புள்ள அந் நாட்டில் அவர்கள் சம்பளம் மிகுதியாக இருப்பதாலும், வாழ்வியல் ஏந்துகள் நிறைந்து கிடைப்பதாலும் தென்னகத்திலிருந்து அமெரிக்கா சென்றவர்கள் மீண்டும் இங்கு வந்து வாழ்வதில் நொந்து கொள்கின்றனர்.

'உழைப்பதில் மிகுவாகக் கடினப்பட்டு உழைக்கக் கூடியவர்கள் இவர்கள்' - எனப் பெயரெடுத்த அளவில், இவர்கள் அங்கு உழைத்துக் கொண்டுள்ளனர்.

வாழ்க்கை: ஆடம்பரமான நிலையில் வாழ்வதற்கான பொருள்கள் தொலைக்காட்சி, குளிர்பதனம், துணி துவைக்கும் பொறி, மேலும் பல நிலைகளுக்கான பொறிகள் அங்கு முன்பணம் ஏதும் பெறாமலேயே படிப்படியாகக் கொடுக்கும் ஏந்தில் அமைக்கப்பெற்றுள்ளது. தொலைபேசி தேவை என்று அத்துறைக்கு நாம் தெரிவித்த ஒரு மணி நேரத்திற்குள் தொலைபேசி கொண்டுவந்து வைத்துவிடுவார்கள். (நம் நாட்டில் ஆயிரக் கணக்கில் முன் பணம் செலுத்தி, ஏறத்தாழ ஐந்தாண்டுகள் காத்திருந்தாலும் பெற இயலாதவர்க்கு எம் இரங்கல்கள்!)

உணவு: பெரும்பாலும் மகிழுந்து வைத்திருக்கிற இவர்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை வண்டியில் சென்று வாங்கி வருகின்றனர். வெப்பப்படுத்திச் சாப்பிடக்கூடிய அளவிலேயே பெரும்பாலான உணவுப் பொருள்கள் அங்கு உள்ளன. தமிழக உணவுகளுக்குத் தேவைப்படும் பொருள்கள் சில முகாமைக் கடைகளிலேயே கிடைக்கின்றன.

24 மணிநேரமும் தடையின்றி மின்சாரமும், வெந்நீரும் கிடைக்கின்றன. ஆட்டு இறைச்சி அதிகம் புழக்கத்தில் இல்லாமல் கோழி, மாடு இவற்றின் கறிகளே உள்ளன. பாலில் இருவகைக் கொழுப்புள்ள பாலும், கொழுப்பு நீக்கப்பெற்றபாலும் விற்கப்படுகின்றன. பெரும்பாலும் யாரும் தண்ணீருக்குப் பகரமாக குளிர்குடிப்புகளையே பருகுகின்றனர்.

நேரப் போக்கு: திரைப்படம், தொலைக்காட்சி, படக்காட்சி (Video) இவையே முழுமையாகப் பொழுதுபோக்குக் கருவிகளாக உள்ளன. பேசிக்கொண்டு திரிகிற வகையில் காலக் கடத்தத்தையே நாம காண்பது அரிது.

கல்விமுறை: கல்லூரி நுழைவுப் படிப்பு வரை அங்கு இலவயமான நிலையே உள்ளது. பொத்தகங்கள், போக்குவரவுச் செலவு, சீருடை, அனைத்தும் இலவயமே. பகல் உணவுக்கென்றுமட்டும் சிறு தொகையைப் பெறுகின்றனர். 5 அகவை முடியாத குழந்தைகளைப் பள்ளியில் பார்க்கவே முடியாது. அமெரிக்கர் தங்கள் குழந்தைகளை வளர்ப்பதில் அதிகக் கவனம் செலுத்துவதில்லை. எனவே பெரும்பாலார் கல்லூரியில் படிப்பதே இல்லை.

கல்லூரிப்படிப்புக்கு மிகுந்த செலவாகின்றது. அதற்கு அரசு வட்டிக்கடன் கொடுத்து, மாணவர் பின்னால் தொழில் செய்யும்பொழுது அதைப் பெற்றுக் கொள்கிறது.

நாகரிகம்: அங்குப் போய் வாழ்கின்ற நம் நாட்டினர், பெரும்பாலும் வாழ்விற்காக அமெரிக்க உடைகளையே உடுத்திக் கொள்கின்றனர். இருப்பினும், நம்முடைய தனித்தன்மை காக்கப்பெற வேண்டும் எனப்பண்பாட்டுச் சீரழிவு இல்லாமல் நடந்து கொள்கின்றனர்.

விடுதலை' இந்தியாவில்(!) கொள்ளை ...!

[கீழே கொடுக்கப்பெற்றுள்ள அட்டவணை இந்தியப் பெரும் முதலாளிகள் சொத்துக்களின் மதிப்பீடுகள். நம் நாட்டு அன்றாடங் காய்ச்சிகளாக உள்ள ஏழைமக்களின், வரண்ட வயிற்றின்மீது ஏறிச் செழிப்போடு நிற்கும் இம் முதலைகளின் சொத்தை எண்ணிப் பாருங்கள்...?]

நிறுவனம்	1978-இல் (கோடியில்)	1982-இல் (கோடியில்)
1. டாட்டா	1309-38	2430-83
2. பிர்லா	1309 99	2004-74
3. சிங்காணியா	352-53	620.31
4. மப்த்லால்	371-06	61 -69
5. தாபர்	291-01	464-55
6. ஏ. சி சி.	211-96	473-07
7. ரிலையன்சு	119-95	512 07
8. அய் சி அய்.	235 35	378-31
9. சுராபாய்	249-52	374-21
10. மோதி	176 08	359-20
11. கிர்லோசுகர்	191-91	337-35
12. பங்கர்	244-20	336 82
13. பசாச் (Bajaj)	168-61	333-34
14. சீரிராம்	208-65	333-57
15. லார்சன்-டல்ப்ரோ	185 48	323-09
16. அசோக் லேலண்டு	1 4-58	293-21
17. இந்துசுத்தான் லீவர்	187-80	286-72
18. டி. வி. எசு.	164-77	282-80
29. வால்சந்த்	—	269-93
20. மகிந்திரா அன் மகிந்த்ரா	165-58	259-53

[மேலே கூறப் பெற்றவர்கள் தொழில் முதலாளிகள் மட்டுமே. இன்னும் பண்ணை முதலாளிகள், அரசியல் முதலாளிகளின் கணக்குகளையும் பார்த்தால்... அய்யகோ ஏழை உழவனின் சொத்துதான் என்ன?]

— 'வஞ்சிக்கப்படும் தமிழகம்'-நூலிலிருந்து.

மா சே துங்கும்-மூடநம்பிக்கையும்

மக்கள் குமுகாயத்தை மாற்றியமைக்கும் போக்கில் மக்களின் சமய நம்பிக்கைகள், மூடநம்பிக்கைகளைப் பொறுத்தவரையில் புரட்சியாளர் ஒருவர் எடுக்கவேண்டிய வலிவான நிலைப்பாட்டுக்கு மாசேதுங் சிறந்த ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றார். மாசேதுங்-கிடம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் மக்களைப் புதிய வார்ப்புகளாக்க முடியும் என்பதில் ஆழமான நம்பிக்கையும் இருந்தன. கடவுள் மறுப்பு என்பதைக் காலம் கனிந்து வருவதற்குமுன் செய்வதை மாவோ விரும்பவே இல்லை.

'சிலைகளைச் செய்தவர்கள் உழவர்கள் தாம். நேரம் வரும்பொழுது அவர்கள் தங்கள் கைகளாலேயே அவற்றைத் தூக்கி எறிவார்கள். காலம் கனிவதற்கு முன்பு அவர்களுக்கு மாறாக யாரும் இச் செயலைச் செய்யவேண்டியதில்லை.

கடவுளரை வழிபடுங்கள், கவலையில்லை. ஆனால் உங்களிடம் குவான் (சீனக்) கடவுளும், அருள் கடவுளும் மட்டுமே இருந்து, உழவர்க் கழகம் இல்லாமல் இருந்தால், உள்ளூர் கொடுங்கோலர்களையும், கொடுமையான நிலக் கிழார்களையும் தூக்கி எறிந்திருப்பீர்களா? கடவுளரும், 'தேவதைகளும்' உண்மையில் இரக்கத்திற்கு உரியவர்கள். நீங்கள் அவர்களைப் பன்னூறு ஆண்டுகளாகவே வணங்கி வருகிறீர்கள். ஆனால் உங்களுக்காக அவர்கள் உள்ளூர் கொடியவர்கள் அல்லது கொடும் நிலக்கிழார்கள் ஒருவரையேனும் தூக்கியெறிந்ததில்லையே'.

— 'மாவோ'-பற்றிய நூலிலிருந்து,
இலண்டன் பதிப்பு.

அதிகாரியின் பிள்ளைக்குத் தொல்லை என்றால், சட்டம் வேலை செய்யும்!

வடநாட்டுப் பரோடாவில், துறவிகள் உடையில் உலாவிய போலிச் சாமியார் ஒருவன், சிறுவர்களைக் கடத்திவந்து, வலுக்கட்டாயமாக அவர்களின் அரத்தத்தை உறிஞ்சி எடுத்தும், அதை அரத்த வங்கிகளிடம் வணிகம் செய்தும் வந்திருக்கிறான். இ'துநீண்டகாலமாக இதைத்தான் தம் தொழிலாக நடத்தி வந்திருக்கிறான் என்று தெரிகிறது! அரத்த வங்கிகளுக்கு அடிக்கடி வந்து அரத்தத்தை விற்பனை செய்துவந்த இந்தச் சாமியாரை, எந்த மருத்துவத் துறை அதிகாரியும் ஐயப்படாமல் இருந்துவந்திருக்கிறார்கள். ஆனால், காவல் துறை அதிகாரியின் மகன் சிலகாலமாகக் காணாமல் போனதால், அச் சிறுவனைக் கண்டுபிடிக்கும் பொருட்டு. இந்தச் சாமியாரைக் கண்டு ஐயப்பட்டு, உசாவியதில் அதிகாரியின் மகன் இச் சாமியாரிடம் சிக்கியுள்ளது தெரிய வந்துள்ளது. இதன்பிறகுதான், சாமியாரின் இந்தத் தொழில் அறியப்பட்டது. இதற்குமுன் ஏராளமான சிறுவர்களைக் கடத்திவந்து அரத்தங்களை உருஞ்சிப்பிழைத்ததைப் பொருட் படுத்தாமலிருந்து அதிகாரியின் பிள்ளைக்குத் தொல்லை வந்தபிறகுதான் சட்டம் தன் வேலையைச் செய்ய தொடங்கியுள்ளது போலும்! என்னே கொடுமை! — வியன்

ஆடு, மாடு, நாயை அடைப்பது போன்று... பெண்களை!

சைனபா அப்போது ஆறுமாத கர்ப்பிணி. அவளுடைய கணவன் அக்ரம் கொஞ்சம்கூட இரக்கம் இல்லாமல், அவளை மணவிலக்குச் செய்து விட்டதாகச் சொல்லிப் பிறந்த வீட்டுக்கு விரட்டி விட்டான். அதன் பின்னர் அவன் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு, 'குவைத்துக்கும்' சென்றுவிட்டான். அப் பெண்ணின் வாழ்நாளுக்குரிய வழியை ஏற்படுத்தவில்லை.

கதீசாவுக்குக் கேரளாவில் உள்ள 'நெல்லாளம்' என்பது சொந்த ஊர். அவளுடைய கணவன் 14 அகவையுள்ள வேறொரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு கதீசாவை வீட்டை விட்டுத் துரத்தி விட்டான். மூன்று குழந்தைகளுக்குத் தாயான அவள், இப்போது துணையற்றவளாய் உள்ளாள்.

இப்படி ஆதரவு இல்லாமல் துரத்தப்பட்ட இசுலாமிய உடன்பிறப்புகளின் கண்ணீர்க் கதைகள் ஒவ்வொரு தெருவிலும், ஒவ்வொர் ஊரிலும், தேசத்திலும் நிறைய இருக்கின்றன: இங்ஙனம் எரிந்து கொண்டிருக்கிற கண்ணீர்த் துளிகளில் ஒன்று கேள்விக்குறியாகிட உயர் அற மன்றம் (Supreme Court) இவ்வாறு தீர்ப்புச்சொன்னது.

இசுலாமியக் குமுகத்தில், கணவன் தன் விருப்பப்படி மனைவியை மணவிலக்குச் செய்யமுடியும். மணவிலக்குச் செய்வதற்கு அவன் எந்த அறமன்றங்களின் படிகளிலும் ஏறி இறங்கவேண்டாம். 'தலாக் தலாக்' - என்று மூன்று முறை சொன்னால்போதும், மணவிலக்கு நடந்துவிடும். மணவிலக்குச் செய்தபின், அப் பெண்ணுக்கு வாழ்நாள்படி எதுவும் தரவேண்டாம். எத்தனை ஆண்டுகள் அவனோடு வாழ்ந்து, எத்தனைக் குழந்தைகளுக்குத் தாயானாலும், கைவிரல் தேய, காலில் வெள்ளெலும்பு தெரிய, அவள் எத்தனைக்காலம் உழைத்திருந்தாலும், அவளுக்கு இதுதான் முடிவு.

இவ் வொடுக்கு முறைக்கு எதிராக உயர் அறமன்றம் முதன்முறையாக ஒரு கொட்டு வைத்தது.

நடுவண் பைதிரம் (மத்தியப் பிரதேசம்) இந்தூரைச் சேர்ந்த 'சாபானு பேகம்' என்ற பெண், முகமது அகமதுகான் என்ற வழக்கறிஞருக்கு 1932-ஆம் ஆண்டு வாழ்க்கைப்பட்டாள். ஐந்து குழந்தைகளைப் பெற்று, 43 ஆண்டுகள் வாழ்க்கை நடத்திய அப் பெண்ணை, அவளுடைய கணவன் துரத்தி விட்டான். தன்னுடைய வாழ்க்கையின் பெரும் பகுதியை அவனோடு கழித்தாள். ஆனால் இப்போது அவள் உயிர் வாழ்வதற்கு எந்த வழியும் கிடையாது. வேறு வழியற்ற அவள் முறைமை (நீதி) கேட்டு உயர் அறமன்றத்தில் வழக்கு கொடுத்தாள். இந்தியக் குற்றவியல் சட்டம் பிரிவு 125-இன்படி அவளுக்கும், அவள் குழந்தைகளுக்கும், அவளுடைய கணவன் உதவித்தொகை தரவேண்டும் என உயர் அற மன்றம் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பு தந்த நம்பிக்கையால், கதீசாவும் சைனாபாவும்கூட இப்போது அறமன்றத்தின் கதவுகளைத் தட்டியுள்ளனர். ஆயிரமாயிரம் சைனாபாவும் கதீசாவும் கதவைத் தட்டக் காத்திருக்கின்றனர். இசுலாமிய உடன் பிறப்புகளும், முற்போக்குச் சிந்தனை கொண்ட இசுலாமியர்கள் சிலரும் இந்தத் தீர்ப்பை வரவேற்றுள்ளனர். ஆனால், மாற்றங்களை விரும்பாத பழமைப் பிடிப்புள்ள இசுலாமியர்கள் நாடு முழுவதும் இத் தீர்ப்புக்கு எதிரான கண்டன ஊர்வலங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி வருகின்றனர். இசுலாமிய தனிமாந்த சட்டப் பாதுகாப்பு நாள்' (சரீயத் நாள்) கொண்டாடுகின்றனர். இசுலாமிய தனிமாந்த சட்டத்தைப் பாதுகாக்கும் வகையில் இந்தியக் குற்றவியல் சட்டப் பிரிவு 125-ஐத் திருத்தவேண்டும் என்று பாராளுமன்றத்தில் ஒரு முந்து ஆவணத்தை வெட்கமில்லாமல் தாக்கல் செய்துள்ளனர்.

'சரீயத்' - என்பது இசுலாம்களுக்கான தனிச் சட்டமாம், அதைக் கேள்விக்குள்ளாக்கவோ, அதன் மீது கை வைக்கவோ யாருக்கும் உரிமை கிடையாதாம், குமுறுகிறார்கள்.

இவர்கள் பாதுகாக்க விரும்பும் இசுலாமிய தனிமாந்தச் சட்டம் பட்டிகளில் அடைத்திருக்கும் ஆடு, மாடுகளைவிட, நாயைவிட, இசுலாமிய உடன் பிறப்புகளை எப்படியெல்லாம் இழிவுபடுத்துகிறது, தெரியுமா?

'மனஓசை' - இதழிலிருந்து

'வலுவான இந்தியா' - மட்டுமன்று, 'வலுவான இலங்கை'-அமையவும் ஆன்மீகத்தை-மூடநம்பிக்கையை - வளர்ப்போம்!

தமிழகத் தமிழினம் பார்ப்பனீயத்திற்கு எப்படிப் படிப்படியாக அடிமையுற்றுப் போனதோ, அதே போன்று ஈழத் தமிழர்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள உணர்வுகளையும் பார்ப்பன நச்சு விதை தூவி அடக்க இந்திய அரசு திட்டமிட்டுக் கொடுத்தபடி இலங்கை அரசு செய்கிறது.

கடந்த 16-திசம்பர் அன்று சென்னை சிறுவர் பள்ளி ஒன்றில் இராசிவ்காந்தி வலுவான இந்தியா உருவாக ஆன்மிகத்தை வளர்க்க வேண்டும்-என்று பேசியதை அடுத்து, திசம்பர் 26-ஆம் நாள் இலங்கை கொழும்புவில் உள்ள கதிரேசன் கோயிலில் அரசு சார்பில் 45 நாள்கள் குதிரைவேள்வி ('அசுவமேத யாகம்') நடைபெறப்போகிறது.

குதிரை ஒன்றைப் பலிகொடுத்து நடத்தப்பெறும் இந்த வேள்வி (யாகம்) இலங்கையில் முதன் முறையாக இப்பொழுதுதான் நடைபெற இருக்கிறது. நாட்டின் அமைதிக்காகவும், அரசியல் தீர்வுக்காகவும் நடத்தப்பெறுவதாக அறிவிக்கப்பெற்றுள்ள இந்த வேள்வியை (யாகத்தை) நடத்துவதற்கென இந்தியாவிலிருந்தோ, பாக்கித்தானிலிருந்தோ அழகிய வெள்ளைக்குதிரை ஒன்றை வாங்கவும், ஏறத்தாழ 40க்கும் மேற்பட்ட 'வேதப்' 'புரோகிதர்களை' அழைக்கவும் திட்டமிட்டுள்ளது இலங்கை அரசு!

எத்தனை ஆண்டுகள் உறங்கிக் கிடப்பது?

ஓய்ந்திடல் இல்லை, என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை, என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை, என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3] இதழ் எண்: 69 (9-2-1986) [பகுதி-51-52

குடமுருட்டியில் வெடித்த குண்டு!

"ஏறத்தாழ எழுபது கோடி மக்கள் வாழ்கின்ற, உலகின் மிகப் பெரிய குடியரசு நாடு இந்தியா. இந்த நாட்டில்தான் உலகில் மிகச் சிறந்த ஆன்மிக உணர்வு பொங்கித் ததும்புகிறது; இங்குதான் வற்றாத புனித ஆறுகளும், எண்ணிலடங்காத கோயில் - குளங்களும் நிறைந்திருக்கின்றன; மேலும், இந் நாட்டைத்தான் முப்பத்து மூவாயிரம் தேவர்களும், பதினெண்ணாயிரம் முனிவர்களும், கின்னரர், கிம்புருடர் போன்றவர்களும், சிவன், விண்ணு, பிரம்மா போன்ற கடவுள்களும், வலம்வந்து காக்கிறார்கள். (மற்ற நாடுகளை யார் காக்கிறார்களோ தெரியவில்லை.) இஃது உலகிலேயே மிகவும் புண்ணியம் நிறைந்த நாடு" என்றெல்லாம் தொன்மைப் பெருமைகள் நிலவுகின்றன. இங்குதான் வெறும் மேலுடன் சுற்றித் திரிந்த காந்தி என்னும் மாந்தத்தெய்வம்(!) பிறந்தது; இங்குதான் புத்தர் என்னும் புண்ணியன் நல்லிறக்கம் கொண்டார்' என்றவாறெல்லாம் புகழ்பாடிக் கொண்டாடுகிறார்கள்.

இத்தகைய சீரும் சிறப்பும்(!) கொண்ட இந் நாட்டின் தலைமை அமைச்சர்தாம் குண்டு தொளைக்காத எஃகுக் கவசச் சட்டை அணிந்துகொண்டு, பல்லாயிரக்கணக்கான காவலர்கள் புடைசூழ்ந்து காவல் காக்க, குண்டுகள் ஊடுருவாத கண்ணாடிக் கூண்டுக்குள் நின்று பேசுகிறார் என்றால், இஃது ஒரு குடியரசு நாடு என்றோ, இங்குள்ள தலைமையமைச்சர் மக்கள் நலம் கருதுகிறவர் என்றோ கூற இயலுமா என்பதைத் தேசியம் பேசும் திருடர்கள் எண்ணிப்பார்த்தல் வேண்டும்.

அண்மையில் திருவையாறு இசை விழாவிற்கு வரவிருந்த இந் நாட்டின் தலைமை அமைச்சர் வருகைக்கு இரு நாள்களின் முன், தஞ்சையிலிருந்து திருவையாறு செல்லும் வழியில் உள்ள குடமுருட்டி ஆற்றின் பாலத்தில் வெடிகுண்டு வெடித்தது. இதை வெடிக்கச் செய்தவர்கள் 'உழவர்கள் விடுதலை இயக்கம்' என்றும், 'தமிழக விடுதலைப் படை' என்றும் செய்தித் தாள்களில் செய்தி வந்தது. யார் இந்தக் குண்டை வைத்தவர்கள் என்பதைவிட, என்ன கருத்தில் இதை வைத்தார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்கும்பொழுது, நம் இந்திய ஆட்சித் தலைமையைப் பற்றி வெட்கித் தலை குனியத்தான் வேண்டும்.

"காவிரி வறண்டு கிடக்கும்போது, இராசீவ் காந்தியே, தியாகராயர் திருப்போற்றி விழாவுக்காக உங்கள் வருகை தேவைதானா?" என்றும்,

"இராசீவ் காந்தி ஓர் இந்தி வெறியர். அவர் இலங்கைத் தமிழர் சிக்கல் குறித்துப் புறக்கணிப்பாக இருக்கிறார்" என்றும், குண்டு வெடித்த பாலத்துக்கு அருகில் கிடைத்த அறிக்கைகளிலும், சுவரொட்டிகளிலும் செய்திகள் இருந்தனவாகத் தெரிகின்றன. இவற்றில் உள்ள கேள்வியும், கருத்தும் ஞாயம் அற்றனவென்று கருதிவிட முடியாது. இங்குள்ள இலக்கக்கணக்கான தமிழ் நெஞ்சங்களில் இருக்கின்ற உணர்வுதான் அது.

வெறும் விளம்பரத்தாலும், வேடிக்கை விழாக்கள், விளையாட்டுகள் போலும், பணக்காரப் பொழுதுபோக்குகளாலும் இந் நாட்டில் உள்ள பல்லாயிக்கணக்கான ஏழை மக்கள், உழவர்கள், தொழிலாளர்கள் போன்றவர்களின் வயிறு நிரம்பிவிடாது. ஆட்சி என்பது அவர்களுக்காகத்தான் பெரும்பான்மையும் இருக்க வேண்டுமே தவிர, வடையும், பொங்கலும் நெய் வழிய வழிய முக்கிவிட்டுப் பண்பாடு, கலை, என்று வாய்ப்பாட்டுப் பாடிக்கொண்டும் அதற்குத் தக ஆடிக்கொண்டும், பட்டாடை உடுத்திக்கொண்டு அவற்றைக் கேட்டும் பார்த்தும் தலைசை ஆட்டிக் கிறு கிறுத்துப் போகும் சிறுபான்மை மக்களுக்காக மட்டுமே அன்று என்று எச்சரிக்கை செய்யத்தான் இந்தக் குடமுருட்டிப் பாலத்தில் வெடித்த குண்டு என்று அதிகார வெறியர்கள் எண்ணிக்கொள்க!

காவிரி நீரின் ஒப்பந்தத்தை ஓர் ஒழுங்கு செய்து, தமிழக உழவாண்மைக்கு உயிரூட்ட ஒரு முயற்சியும் செய்யாத அதிகாரக் கிறுக்கர்கள், இசைவிழாவில் வந்து பாடி ஆடிக் களிக்க வேண்டுவது தேவைதானா என்னும் வினா, இராசீவ் காந்திக்கு உண்மையான அகக் கண்களைத் திறந்திருக்க வேண்டும்.

அதேபோல், இலங்கையில் நாள்தோறும் நூற்றுக் கணக்கான தமிழ்மக்கள் மிகக் கொடுமையாகச் சரகடிக்கப்படுகிறார்கள்.

[மூன்றும் பத்தி பார்க்க]

செய்திச் சுடர்!

1. கொடுமையான தண்டனை!

மகாராட்டிரம், தானே என்னும் ஊரில் உள்ள டொம்பிவிலி என்னும் பள்ளியில் 10 ஆம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் சோதிசவந்த் என்னும் மாணவிக்கு, அவள் பள்ளியின் ஆண்டு விழாவில கலந்து கொள்ளவில்லை என்பதற்காக, அவ் வகுப்பு ஆசிரியர், காலின் பெருவிரலைப் பிடித்தவண்ணம் குனிந்துகொண்டே இரண்டு மணி நேரம் நிற்கும்படி தண்டனை கொடுத்தார். அம் மாணவி இடையில் அவ்வாறு தொடர்ந்து நிற்க தன்னால் முடியவில்லை என்று கூறியும் ஆசிரியர் விடவில்லை. தண்டனை முடிந்ததும் அவள் மயங்கிவிழுந்தாள். பின்னர் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றதில் குனிந்துகொண்டே நீண்டநேரம் நின்றதால் அரத்த ஓட்டம் தடைப்பட்டு இடுப்புக்குக் கீழே செயலிழந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறிவிட்டனர். ஆசிரியரின் கடும் தண்டனையால் அவள் வாழ்க்கையே முடமாகிவிட்டது. ஆசிரியர் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு ஒரு பொதுநிறுவனம் கோரியுள்ளது.

2. இந்தியாவில் 1992-இல் ஒலிம்பிக் போட்டி

1992-இல் ஒலிம்பிக் போட்டியை இந்தியாவில் நடத்துவதற்குத் தேவையான வசதிகள் இங்கு உள்ளனவா என்று பார்க்க அனைத்துலக ஒலிம்பிக் குழு ஒரு சிறு குழுவை அனுப்பியிருந்தது. அக்குழு இந்தியாவில் அதற்குப் போதுமான வசதிகள் உள்ளன என்று கருத்துத் தெரிவித்துள்ளது. இதற்கு முன்னரும் இரண்டு குழுக்கள் வந்து ஆய்ந்து நிறைவு தெரிவித்துள்ளன. ஏறத்தாழ 2 இலக்கத்து 50 ஆயிரம் பேர் இப் போட்டியைக்காண வெளி நாட்டிலிருந்து வருவார்களாம்.

3. புதிய கல்விக் கொள்கைக்கு மாணவர் அமைப்பு எதிர்ப்பு!

1. புதிய கல்விக் கொள்கை பற்றி முழுமையான-மக்களரசுத் தன்மையுள்ள கருத்துரையாடல் நடத்த நடுவணரசு அஞ்சுகிறது.

2. அதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் ஆமாம் போடுபவர்களை மட்டுமே கருத்துரையாடலுக்கு அழைக்கிறது.

3. தங்களின் மாணவர் அமைப்பை அழைக்க வேண்டும் என்று அரசுக்கு கேட்டுக்கொண்டும் இதுவரை விடையில்லை.

4. கற்பிக்கும் முறையில் சிறந்த முறை என்று மெய்ப்பிக்கப்பட்டிருக்கும், ஆசிரியர்கள் - மாணவர்கள் உறவு முறையைத் தாக்குதலுக்கு உள்ளாக்கும் வகையில் பல்விசார க் கல்வி முறையைப் புகுத்தவே அரசு முயற்சி செய்கிறது.

5. மாதிரிப்பள்ளி, உயர்கல்வி நடுவங்கள் போன்றவற்றை அமைப்பதன் வழி, ஒரு சிலரை வேண்டுமென்றால் 21-ஆம் நூற்றாண்டிற்கும் உருவாக்கிவிடலாம். ஆனால், பெரும்பாலான மக்கள் பல நூற்றாண்டுகள் பின்னுக்குத் தள்ளப்படவேண்டி வரும்.

6. தொழிற்கல்வி என்னும் பெயரில் கல்வியையே தொழில் வயப்படுத்த முயற்சி நடக்கிறது. இதன் மூலம் சிந்திக்கும் திறனற்ற பொறிமாந்தர் [ரோபாட்]களையே உருவாக்க முடியும்.

7. பட்டப்படிப்புக்கும் வேலைக்கும் தொடர்பே இல்லாமல் செய்யும் கருத்து ஏதம்![ஆபத்து] உடையதாகும். இது பெரும்பாலோர்க்குப் பொதுக் கல்வி வாய்ப்பையும் கொடுக்காது.

8. மாந்த மதிப்பீடுகளுக்கு முகாமை கொடுக்கிறோம் என்னும் பெயரால் மதச்சார்புள்ள கல்வித் திட்டத்தையே நடுவணரசு கொண்டுவர முயற்சி செய்கிறது. இதன்வழி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பல்கலைக் கழகங்களின் குடியரசு உரிமைகளை முடக்கத் திட்டமிடுகிறது.

9. மும்மொழிக் கொள்கையைத் திணிக்கவே இதன்வழி அரசு திட்டமிடுகிறது.

— என்னும் இக் குற்றச்சாட்டுகளைக் கூறியுள்ளார் 'அனைத்து இந்தியக் குடியாட்சி மாணவர்கள் அமைப்பின் தலைவர் சாயா முகர்சி என்பவர்.

4. தொலைக்காட்சிப் பெட்டிகள் பெருக்கம்!

இந்தியாவில் தற்போது தொலைக்காட்சிப் பெட்டிகளை வைத்திருப்போர் எண்ணிக்கை 60 இலக்கம். ஏழாவது திட்டக்காலக் கடைசிக்குள் இது 3 கோடியாக உயர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 20 ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டில் 400 தொலைக்காட்சிப் பெட்டிகளே இருந்தன. 0

தமிழன் என்றோர் இனமில்லை

அண்மையில் வேதங்களில் 'சரசுவதி ஆறு' என்று ஓர் ஆறு குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அதை ஆராயவேண்டுமெனவும் குழு ஒன்று அமர்த்தப்பெற்றது. வார்கங்கர் என்பவரின் தலைமையில் அமர்த்தப்பெற்ற அந்தக் குழு சரசுவதி ஆறு தோன்றியஇடம் காணமல்போன காலம், காணமல் போன இடம் இதுபற்றியெல்லாம் ஆராயவேண்டுமாய்ப் பணிக்கப்பெற்றது.

மிகவும் கடினப்பட்டுக் கண்டுபிடித்துவிட்டதாகச் சில கிழமைகளுக்குள்ளாகவே அக் குழு அவ்வாற்றைப்பற்றி அண்டப்புளுகு புளுகியுள்ளது.

"சரசுவதி ஆறு, குசராத்தில் உள்ள அம்பாலா' சோமநாத் எனும் மாவட்டங்களில் உள்ள சிரிமோசு எனும் மலையில் இருந்துதோன்றியது என்றும், எட்டுக் கற்கள் அகலமும், 2,500 அயிரமாத்திரி (கி.மீ.) நீளமுமுள்ள இந்த ஆறு படிப்படியாகக் காய்ந்துபோய் இன்றைக்கு எச்சமாக அதன் கிளை ஆறுகளான சோதிர், திரிசுதாவதி, யமுனை, சட்லச், வியாசு போன்ற ஆறுகளாக உள்ளது என்றும் முடிவு செய்யப்பெற்றுள்ளது.

இத் தீர்ப்பைக் காட்டித் தங்கள் வெள்ளைப்பேனிப் பூணூலை உருவிவிட்டபடி 'இந்து' ஆங்கில இதழ் கூறும்பொழுது, இவ் வாய்வு வழிப் பார்க்கும்பொழுது, ஆரியர்கள் நடு ஆசியாவிலிருந்து வந்தவர்கள் என்ற தவறான கருத்துகள் பொய்யாக்கப்படுகின்றன என்கிறது.

போகிற போக்கைப்பார்த்தால், 'தமிழன் என்றோர் இனம் இல்லை' என்று சொல்லி, இத் தமிழர்கள தலை மீதே மிளகாய் அறைக்கிற நேரம் வந்தாலும் வியப்பதற்கு இல்லை.

இவ்விடத்தில் நாம் மேலும் பார்க்க வேண்டியது எஃது எனில்,

வேதப் பொய்களை மெய்யாக்குவது மட்டும் பார்ப்பனீயத்தின் வேலையாக அமையாமல், தமிழினத்தின் மெய்களையும் பொய்யாக்குவதுதான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

சிலப்பதிகாரப் பாடலையும், 'The Riddles of Three Ocean' போன்ற ஆழ்கடல் ஆய்வுநூல் முடிவுகளையும் கொண்டு, தமிழன் பிறந்தகம் குமரிக் கண்டமே எனத் தெளிவாக்கப்பட்ட போதும், அதை ஆய்வுசெய்து வெளியிடாமல் இருப்பது எந்த அளவு மூடிமறைக்கும் தன்மை என்பதை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும்.

இந்நிலையில் இந்தியாவின் ஒற்றுமை பேசும் தேசிய வழியினரின் போலிமைத்தனம் விளங்குகிறது. 0

[முதல் பத்தித் தொடர்ச்சி]

அவர்களுக்கு ஏதோ நன்மை செய்வது போல் வாயளவில் பேசிவிட்டுச் செயலில் மறைமுகமாகச் சிங்கள ஆட்சி வெறியன் செயவர்த்தனன் கையை வலுப்படுத்திக் கொண்டிருப்பதும், அதே பொழுதில், ஆப்பிரிக்க இனமக்களுக்காகவும், அராபிய மக்களுக்காகவும் முதலைக் கண்ணீர் வடிப்பதும் எத்துணையளவு கரவான கொடுமை! இதை இராசிவுக்கு நினைவூட்டத்தான் குடமுருட்டிப் பாலத்தில் குண்டு வெடித்தது!

ஆனால், பல்லாயிரக் கணக்கான கருவிக் காவலர்களின் அதிகாரச் சுவர்களுக்குப் பின்னால், இந் நாட்டின் வல்லதிகாரி இராசிவ் காந்தி திருவையாறு வந்ததும், தியாகராயர் திருப்போற்றி விழாவைத் தொடங்கி வைத்ததும், வழக்கம்போல் நடந்தேறி விட்டன.

இந்த நாட்டின் தலைமை அதிகாரம் பார்ப்பனர்க்கே என்பதை மெய்ப்பிக்கும் அளவில், தியாகராயர் பெயராலும் கலை, பண்பாடு என்னும் புனைவாலும் பார்ப்பனக் கும்பலுக்கு நடுவில், பார்ப்பனிய முதலாளிய, மதவெறி, இந்திவெறி மூதலிய உணர்வுகள் கொண்ட இரண்டுங்கெட்ட, பார்ப்பனத் தலைமையமைச்சர் இராசிவ்காந்தி திருவையாற்றில் உள்ள பார்ப்பன அதிகாரி ஒருவரின் வீட்டில் உணவுண்ண இசைந்திருக்கிறார் எனில், இந் நாட்டு மக்களுக்கு உண்மையான விடிவு எவ்வாறு கிடைக்கப் போகிறது?

தலைமையமைச்சர் ஒருவர் தமக்குக் கீழுள்ள அதிகாரி ஒருவரின் அதுவும் அய்யர் ஒருவரின் வீட்டில் உணவுண்ணுவது என்றால், இந் நாட்டின் அரசியக்கம் எப்படிச் சரியாக நடக்க முடியும்? ஊழல் எவ்வாறு ஒழியும்? நேர்மை எங்ஙன் விளையும்? நடுநிலையாளர் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இவை எல்லாவற்றுக்குமான ஒட்டுமொத்த எச்சரிக்கைதான் குடமுருட்டிக் குண்டு! அந்தக் குண்டு திருவையாற்றில் மட்டுந்தான் வெடிக்கலாம் என்பது நாட்டு நிலையாக இல்லை. பஞ்சாபில் வெடித்துக் கொண்டுள்ளது! அசாமில் வெடித்தது! மிசோராமில் வெடித்தது! நாகாலாந்தில் வெடித்தது! வங்காளத்தில் வெடித்தது! குசராத்தில் வெடித்தது! திரிபுராவில் வெடித்தது! இன்னும் பல இடங்களில் வெடிக்க உள்ளது! எழுச்சி கொண்டுவிட்ட இத் தொடர் நிகழ்ச்சியை இனி வாயால்ஊதி அணைத்துவிட முடியாது!

எந்நாட்டிலும், எப்பொழுதும், புதுமைப் புரட்சிக்கு ஆதரவாக எப்படி மக்கள் பலர் உள்ளார்களோ, அப்படியே அதற்கு எதிராகவும் ஆட்சிக்குச் சார்பாகத் தைத்தாளம் போடவும் மேல்மட்ட வாழ்க்கையினர் இருக்கவே செய்வர். அவர்களை வைத்து மட்டும் ஆட்சியினர் மதிமயங்கிவிடக்கூடாது என்பதற்கான எச்சரிக்கையே இக் குடமுருட்டிக் குண்டு நிகழ்ச்சி! 0

எம்மை வலியாக வளை இந்தியா நீ வெறுக!

தொடர் : 6

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தமிழீழம் விடுதலை பெறுமா? வழியென்ன?

- மலர்மாறன் -

'இப்படி ஈழத்தமிழ் நாட்டை அமைப்பது கற்பனையில்தான் இயலும்; நடைமுறையில் இயல்வதன்று' என்று கூறும் சிலர் எழுப்பும் ஐயங்கள் பல. அவற்றில் முதன்மையானவை இவை, அவற்றிற்காக விடைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. இரண்டு இலக்கம் தமிழ் ஈழத் தொண்டர் படையை எப்படிக் கடல் கடந்து இலங்கைத் தீவிற்குள் கொண்டு செல்வது?

2. இவர்கள் இலங்கைக்குள் இறங்குவதை இலங்கைப் படை வேடிக்கைப் பார்த்துக் கொண்டா இருக்கும்?

3. தமிழ் ஈழத் தொண்டர் படைக்கு வேண்டிய படைத் தளவாடங்களை வாங்கக் கோடிக்கணக்கான உருபா தேவைப்படுமே; அதை யாரிடமிருந்து பெறமுடியும்?

4. படைத் துறைத் தளவாடங்களை எந்த நாட்டிலிருந்து வாங்க முடியும்?

5. இந்தச் செயல்களை எல்லாம் இந்திய அரசு தடுக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டா இருக்கும்?

இவற்றுக்கான விடைகளும் விளக்கங்களும் வருமாறு:

1. இலங்கைப் படைத்துறைக்குத் தெரியாமல் ஆயிரக்கணக்கான தமிழர்கள் இப்போதுகூட இலங்கைக்குப் படகுகளில் போய் வந்து கொண்டுதாம் இருக்கிறார்கள். பொதுவாகக் கைகளால் இயங்கும் துடுப்புப் படகுகளில்கூட இலங்கைக்குச் சென்றுவிட முடியும். இடைப்பட்ட தூரம் 20 (அயிரமாத்திரி) கி. மீட்டர் கூட இல்லை.

மீன் பிடிப்பதற்காகவும், மற்ற செயல்களுக்காகவும் தமிழக அரசிடமும், தமிழக மக்களிடமும் 4100க்கும் மேற்பட்ட மின் விசைப் (மோட்டார்) படகுகளும், நாவாய்களும் இருக்கின்றன. ஒரு மின்விசைப் படகில் 50 பேர் பயணம் செய்ய முடியும். 4000 படகுகளில் 2 இலக்கம் பேர்களை ஒரே சமயத்தில் கொண்டுசென்று விடமுடியும்.

இலங்கையிலுள்ள தலைமன்னார் பகுதிக்குச் செல்ல வேண்டுமென்றால், மின்விசைப் படகில் 1 மணி நேரம் ஆகும். வேறு ஒரு கமுக்கமான இடத்தில் இறங்குவதற்கு 2 மணி நேரமாகும் என்று வைத்துக் கொள்ளலாம்.

இதன்படி இலங்கைக்கு 4 மணி நேரத்தில்போய் வந்துவிடலாம். தொண்டர் படையினரையும், அவர்களின் கருவிகளையும் இறக்குவதற்கு 2 மணி நேரமாகலாம். ஆக, 6 மணி நேரத்தில் 2 இலக்கம் தொண்டர்களை இலங்கைத் தீவிலே இறக்கி விட முடியும்.

தமிழகக் கடற்கரையிலிருந்து ஓர் இரவில் 10 மணிக்கு புறப்பட்டால் காலை 4 மணிக்குள்ளாக 2 இலக்கம் தொண்டர்களை இலங்கையில் சேர்த்து விட முடியும்.

கமுக்கமாக விடுதலைப் போராளிகளுடன் திட்டமிட்டுச் செயல்பட்டால், இலங்கைப் படையினர் தூங்கிவிழிக்கும் முன்னால், 2 இலக்கம் தொண்டர் படையினரை, ஈழத் தமிழகத்திலே தாவடியிட்டு (முகாமிட்டு) விடச் செய்து விடமுடியும்.

2. தமிழக அரசின் முதலமைச்சராகத் தமிழர் ஒருவர் இருந்திருந்தால், ஒருவருக்கும் தெரியாமல் காதும் காதும் வைத்ததுபோல், இந்தச் செயல்களைக் கமுக்கமாக முடித்துவிடலாம். இலங்கைப் படையினர் விழித்தெழு முன்பே இரண்டு இலக்கம் தொண்டர்கள் இலங்கையில் இறங்கிவிடுவார்கள்.

ஆனால் தமிழன் தோல் போர்த்த செயவர்த்தனாவின் கைக்கூலி போல நடந்துகொள்ளும் மா.கோ. இராமச்சந்திரன், இங்கு ஆட்சி புரிய நேரிட்டு விட்டதால், இம்மாதிரி திட்டத்தை வெளியே சொல்லிய பின்னர்தான் செயல்படுத்த வேண்டிய நிலை நேரிட்டு உள்ளது. மா.கோ. இராமச்சந்திரனை முதலமைச்சர் பதவியிலிருந்து விரட்டிய பின்னரும் இலங்கைப் படை எச்சரிக்கையாகத்தான் இருக்கும்.

இலங்கையின் யாழ்ப்பாணம் போன்ற வடக்கு மாவட்டங்களில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள்; அங்கே விடுதலைப் போராளிகள் இருக்கின்றார்கள். அவர்களோடு கமுக்கமாகத் திட்டமிட்டு ஒரு கமுக்கமான இடத்தையும் நாளையும் குறித்துக் கொள்ள வேண்டும்.

அந்தக் குறிப்பிட்ட நாளில் நமது தொண்டர் படையை இலங்கைக்கு இரவில் அனுப்ப வேண்டும். தொண்டர் படை கமுக்கமான இடத்தை நோக்கிப் போகும். கொரில்லாப் பயிற்சி பெற்ற விடுதலைப் போராளிகள் அந்தக் கமுக்க இடத்தின் பின்னால், அணியமாகப் பதுங்கியிருப்பார்கள்.

அந்தக் குறிப்பிட்ட இடத்திற்கு இலங்கைப் படை வந்தால், பின்னாலிருந்து அவர்களை விடுதலைப் போராளிகள் தாக்குவார்கள். முன்புறம் இறங்கிக் கொண்டிருக்கும் நமது தொண்டர் படை தாக்கும். காலம் இரவாக இருக்கும்.

இந்தச் சூழ்நிலையை எவ்வளவு திறமையான படையினராக இருந்தாலும் எதிர்த்துத் தாக்குப் பிடித்து நிற்பது கடினமாகும். கோழைகளைக் கொண்ட இலங்கைப் படை இரண்டு பக்கத் தாக்குதலையும் எதிர்க்க முடியாமல் ஓட்டமெடுக்கும். நமது தொண்டர் படையை நாம் கொஞ்சம் இடர்ப்பாட்டுடன் இறக்கிவிட முடியும்.

3. தொண்டர் படையை அணியப்படுத்தி அனுப்பி அவர்களுக்கு வேண்டிய கருவிகளையும் வழங்குவதற்குக் கோடிக்கணக்கான உருபா வேண்டும், அதை யார் கொடுப்பார்கள்?

தமிழ் மக்களும், தமிழினமும் அழிக்கப்படும் போது, அதைத் தடுத்து நிறுத்துவதுதான் தமிழக அரசின் முதல் கடமையாகும். அந்தக் கடமையைச் செய்ய தனது அரசுப் பணத்தைச் செலவு செய்வது ஒன்றும் தப்பில்லை. அதை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாமலே செய்தால் எந்தவகைச் சிக்கலும் எழப்போவதில்லை.

மதுரையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டிற்கு 12 கோடி உருபா செலவு செய்து இருக்கிறார்கள். தமிழ் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கே அரசுப் பணம் 12 கோடி உருபா செலவு செய்யலாம் என்றால், தமிழ் இனத்தைக் காப்பாற்ற எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தமிழ்நாட்டு அரசு செலவிடலாம்.

4 இலக்கம் படை வீரர்களைக் கொண்ட பாக்கிதான் படையை எதிர்த்துக் கிழக்கு வங்கத்தை விடுவிக்க இந்தியாவிற்குச் செலவான தொகை ஏறத்தாழ 200 கோடி உருபாதான்.

40 ஆயிரம் கோழைச் சிங்களவர்களைக்கொண்ட சுண்டைக்காய் இலங்கைப் படையை எதிர்க்க ஏறத்தாழ 200 கோடி உருபா தாராளமாக இருக்கும்.

தமிழ் நாட்டு அரசின் இப்போதைய ஆண்டு வருமானம் ஏறத்தாழ 2000 கோடி உருபாவாகும். இதில் ஒரு பத்து விழுக்காட்டை ஒதுக்கினால் 200 கோடி உருபா கிடைத்துவிடுகின்றது.

தமிழக அரசின் ஓர் ஆண்டு வருமானத்தில் ஒரு 10 விழுக்காட்டை ஒதுக்கினாலே தமிழ் ஈழநாட்டை அமைக்கத் தேவையான பொருள் கிடைத்துவிடும்.

உண்மையிலேயே தமிழ் உணர்வுள்ள ஒரு தமிழரின் கையில் தமிழக ஆட்சி இருந்தால் 200 கோடி என்ன? 500 கோடி உருபாவைக்கூட திரட்டிக் கொடுக்க வழிவகைகளை, அவர் செய்து விடுவார்.

தமிழக அரசு பணத்தை அப்படியெல்லாம் செலவிட முடியுமா என்ற கேள்விக்கே இடமில்லை.

12 கோடி செலவு செய்து நடத்திய உலகத் தமிழ் மாநாட்டுக் கணக்கை இரண்டு மூன்று ஆண்டுகள் ஆன பின்னரும், தணிக்கைக்கு அனுப்பி வைக்கவில்லை தமிழக அரசு. அதை யாரும் தட்டிக் கேட்கவுமில்லை; கேட்கவும் மாட்டார்கள்.

சாரவுணவுத் திட்டத்திற்காக ஆண்டுக்கு ஏறத்தாழ 200 கோடி உரு. செலவிடும் கணக்கைத் தணிக்கைக்கு அனுப்பி வைக்கப்போவதல்லை என்று மா. கோ. இராமச்சந்திரன் முடிவெடுத்துள்ளார்.

அதுபோன்றே ஈழத்தமிழ் நாடு அமைப்பதற்கான செலவை நமது தமிழக அரசும் செய்யலாம். தமிழக மக்கள் அதற்கு முழு இசைவு கொடுக்கும் போது வேறு யாரையும் பற்றித் தமிழக அரசு கவலைப்படத் தேவையில்லை.

செய்யும் செலவைத் தம்பட்டம் அடிக்காமல் கமுக்கமாகச் செய்ய வேண்டும். அதுதான் மிகவும் தேவையானதாக இருக்கும்.

4. எந்த நாட்டிலிருந்து படைத் தளவாடங்களை வாங்க முடியும்?

இப்போதுகூட ஈழத்தமிழ் நாட்டு விடுதலை இயக்கத்திற்கு உதவ கியூபா, வியட்நாம் போன்ற பல நாடுகள் அணியமாக உள்ளன. அப்படிப்பட்ட நாடுகளிடமிருந்து நாம் படைத் தளவாடங்களை வாங்கிக் கொள்ளலாம்.

அவற்றிற்கு எப்படிப் பணம் கொடுப்பது? நமது உருபாவைக் கொடுக்க வேண்டுமென்றால் நடுவண் அரசுக்குத் தெரியாமல் கொடுக்க முடியாது. நடுவணரசுக்குத் தெரிந்து கருவிகள் வாங்க நடுவணரசு இசையாது.

100 கோடி உருபாவுக்குப் படைத் தளவாடங்கள் வாங்க வேண்டுமென்று வைத்துக்கொள்வோம். 100 கோடி உருபாவுக்கு தங்கத்தை தம்பட்டம் அடிக்காமல் வாங்க வேண்டும் — இட்டத்தட்ட 6 கல்லெடை (டன்) தங்கம் வாங்க வேண்டியிருக்கும்.

எந்த நாட்டிலிருந்து நாம் கருவிகள் வாங்க விரும்புகின்றோமோ அந்த நாட்டிற்கு அவற்றை மறைமுகமாக அனுப்பிவைக்க வேண்டும். ஒரு படகில்கூட 6 கல்லெடை (டன்) தங்கத்தை அனுப்பி விடமுடியும். பிறருக்குத் தெரியாமல் அனுப்பினால் ஒரு சிக்கலும் வரப்போவதில்லை.

உலகத்தில் தங்கத்திற்கு எப்போதும் மதிப்பு இருந்து கொண்டேயிருக்கும். ஆகவே, அந்த நாடுகள் தங்கத்தை, கருவிகள் கொடுக்கச் செய்வதற்குப் பகரமாக வாங்கிக்கொள்ளும். நாம் தங்கம் கொடுத்துக் கருவிகள் வாங்குவது நடுவண் அரசிற்குத் தெரியப் போவதில்லை.

படைத் தளவாடங்களை நட்பு நாடுகளிடமிருந்து வாங்கித் தமிழ் நாட்டிற்குக் கொண்டு வரவேண்டும். அந்தக் கருவிகளுடன் இரண்டு இலக்கம் தொண்டர்களை இலங்கைத் தீவிற்கு அனுப்பிவைக்க வேண்டும்.

தமிழக அரசு கருவிகள் வாங்குவது இலங்கை அரசுக்குத் தெரிந்தால்தான் அவர்கள் கூக்குரலிடுவார்கள். அதன் காரணமாக நடுவண் அரசு கண்காணிக்க வேண்டிய கட்டாய நிலை ஏற்படும். கமுக்கமாக நட்பு நாடுகளிடமிருந்து படைத் தளவாடங்கள் வாங்கினால் அது யாருக்கும் தெரியப்போவதில்லை.

இரண்டு இலக்கம் தொண்டர் படையும் இலங்கைத் தீவிற்குள் இறங்குவது கமுக்கமாகவே இருக்க வேண்டும். அவர்கள் இலங்கைத் தீவில் இறங்கிய ஒன்றிரண்டு நாள்களிலேயே முன்பு கூறியுள்ளபடி தமிழ் ஈழநாட்டு அரசை அமைத்து, அறிக்கையை வெளியிட்டு விட வேண்டும். அறிவிப்பு வந்த 24 மணி நேரத்தில், ஈழத்தமிழ் நாட்டுப் பகுதிகளிலிருந்து இலங்கைப் படை விரட்டியடிக்கப்பட வேண்டும். எதிர்பாராத தாக்குதலை எதிர்க்க முடியாது இலங்கைப் படைத்துறை பின்வாங்கி ஓடும். ஆனால் மறுபடியும் தாக்குவதற்கு முயற்சி செய்யும்.

அவர்கள் மறுபடியும் தாக்க முற்படுவதற்கு முன்னால், அதை எதிர்த்து முறியடிக்க வேண்டிய ஏற்பாடுகளை, இரண்டு இலக்கம் தொண்டர் படையும் விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து செய்து முடித்து விட வேண்டும்.

தேவையானால் மேலும் தொண்டர் படையை அனுப்பத் தமிழக அரசு அணிய நிலையில் இருக்க

(தொடர்ச்சி 5 ஆம் பக்கம் பார்க்கவும்)

காந்தி, பிற வட இந்தியத் தலைவர்களின் சிலைகளை, படங்களை உடைத்தெறியுங்கள்!

அண்மையில், பம்பாயில் நடைபெற்ற பேராயக் கட்சியினரின் நூற்றாண்டு விழாவில், தென்னகப் பேராயக் கட்சித் தலைவர்களின் படங்களை உருவப் படங்கள் (Cut-out) முதலியன முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன. காமராசர், இராசாசி போன்ற தென்னகத் தலைவர்களின் படங்கள், ஒரு சிறு இடத்திலும் இல்லாமல் சுபாசு சந்திரபோசு, பால்கங்காதர திலகர், கோபாலகிருட்டின கோக்கலே, தாதாபாய் நௌரசி போன்ற வடக்கத்தியத் தலைவர்களின் முழு உருவப் படங்கள் சாலை நெடுகிலும் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்த அளவு வெளிப்படையாக இன அழிப்பு நிலை நிகழும்பொழுது, சுபாசு சந்திரபோசு சாலை என்றும்; நேதாசி சாலை என்றும் பெயர் வைத்துக் கொண்டும், காந்தி, நேதாசி போன்றோர்க்கு சிலை வைத்துக்கொண்டும் நாம் ஏன் இருக்கவேண்டும்?

சீனப் புரட்சியாளர் மா சே துங்-கின் பிறந்த நாள் எவ்வகை அறிவிப்பும் இன்றி மறைக்கப்பெற்றது!

சீனப் பெரும் புரட்சியாளர் மா சே துங்கின் 92 ஆம் பிறந்த நாள், கடந்த 26 திசம்பர் அன்று, எவ்வகை அறிவிப்பும் செய்யப்பெறாமலேயே தட்டிக் கழிக்கப்பெற்றது.

அப் புரட்சியாளரின் 90 ஆம் அகவைப் பிறந்த நாளன்று, ஒளி பரப்பப்பெற்ற 'வீட்டை நோக்கி' என்னும் 50 நிமைய சிறப்பு படம், கடந்த 26 அன்று தொலைக்காட்சியில் மீண்டும் ஒளிபரப்பப் பெற்றதேயொழிய, எதற்கு ஒளிபரப்பப் பெற்றதென்ற அறிவிப்புகூட இல்லை.

மேலும், 1959 ஆம் ஆண்டு, 'சகோசான்' என்னும் தம் சிற்றூருக்குச் சென்று, தம் பெற்றோர்களின் கல்லறைகளைக் கழிவிரக்கத்துடன் மாவோ காணும் காட்சி — அச் சிறப்புப் படத்தில் இருந்ததேயொழிய, பண்பாட்டுப் புரட்சியையே தம் மூழு மூச்சாகக் கருதிய அப் பெருமகனின் இறுதிக் கால வரலாற்றைச் சிறிதேனும் காட்டாமல் மறைத்திருப்பது வருத்தத்திற்குரியது.

— அடிப்படை : 'The Hindu'-28-12-'85.

தென்னகத் தலைவர்களை வடவர் புறக்கணிப்பதா?

தென் ஆப்பிரிக்காவில் தலைவிரித்தாடும் அரசக் கொடுமை நிலைகள்!

அண்மைக் காலமாகத் தென் ஆப்பிரிக்காவில் இனப் படுகொலைகள் மிகமிகக் கொடுமையான முறையில் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த இனப் படுகொலைகள் அரச ஆதரவுடனே நடந்து வருகின்றன என அங்கிருந்துவரும் செய்திகள் கூறுகின்றன.

தென் ஆப்பிரிக்காவைப் பொருத்தமட்டில் எப்பொழுதும் அந்த மண்ணுக்குச் சொந்தமான கருப்பின மக்களுக்கும், ஆளும் சுரண்டல் சிறுபான்மை இனமான வெள்ளைய இனத்திற்குமே இனக் கலவரங்கள் நடப்பதுண்டு. ஆனால், இது அண்மையில், முற்றிலும் மாருகக் கருப்பின மக்களுக்கும், இந்தியக் குடி வழியினர்க்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டு, 100-க்கும் மேற்பட்ட இந்தியக் குடி வழியினர்கள் கொல்லப்பட்டதாகவும், இலக்கக் கணக்கான பொருள் இழப்பு ஏற்பட்டதாகவும் 1,000-திற்கும் மேற்பட்டவர்கள் வீடுகள் காலி செய்யப்பட்டுப் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று ஏதிலிகளாக்கப் பட்டதாகவும் தெரிகின்றன.

இந்தக் கலவரத்தில் காந்திக் குடியிருப்புப்பகுதி முழுவதும் தீக்கிரையாக்கப் பட்டுவிட்டது. அந்தப் பகுதியில் வாழும் மக்கள் முழுமையும் தங்கள்-தங்கள் இல்லங்களை வெறுமை செய்துவிட்டுப் போய்விட்டார்கள். இதற்கெல்லாம் முகாமையான காரணம் என்னவென்ருல், கருப்பின மக்களுக்காகப் போராடி வரும், வழக்கறிஞர் ஒருவர் அண்மையில் இனவெறி அரசால் படுகொலை செய்யப்பட்டு, அந்தக் கொலையைச் செய்தவர்கள் இந்தியக் குடி வழியினர்தாம் எனப் பொய்ச் செய்தியைக் கருப்பின மக்களிடம் பரப்பி விட்டதுதான்.

தென் ஆப்பிரிக்க விடுதலைப் போராளிகளின் தாக்குதல்களை ஈடு செய்ய முடியாத இனவெறியரசு அவர்கள் போட்டத்தைத் திசைதிருப்பும் நோக்கோடு, இந்தக் கொடுஞ்செயலைச் செய்து, ஒன்றுமறியாத மக்களைக் கொன்று குவித்து வருகிறது. இந்தச் செய்தி உண்மை என்பதற்கு ஒரு சான்று என்ன என்னவெனில், கருப்பின மக்களுக்காகப் போராடிய வழக்கறிஞர் இறப்பிற்கு வணக்கம் செலுத்தும் முறையில் 4,000 கருப்பின மக்கள் அமைதி ஊர்வலம் நடத்தினர்கள். அந்த ஊர்வலத்தில் அரசுப் படைத் துறையினர், திடுமென நுழைந்து கலைந்து செல்லும்படி கூறினர்கள். ஆனால், மக்கள் மீறிச்செல்ல, ஊர்வலத்தினரை நோக்கிக் காவல் துறையினர் சுட்டதில், 15 பேருக்குமேல்கொல்லப்பட்டதோடு, 50-க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தார்கள். ஒட்டுமொத்தமாக அண்மையில் மட்டும் 2,000-த்திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருப்பார்களென அஞ்சப்படுகிறது.

இந்தக் கலவரத்தையொட்டி, அமெரிக்காவும், இசுரேலும்கூட தென் ஆப்பிரிக்காவிற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. மற்றும் சாம்பியா, இந்தியா, ஆத்திரேலியா போன்ற நாடுகள், தங்கள் உறவுகள் அனைத்தையும் துண்டித்துத் தங்கள் எதிர்ப்பைக் காட்டி வருகின்றன. அண்மையில் வழிபாட்டுக்கூட்ட மொன்றில், போப் ஆண்டவர் முதன்முதலாக, ஆப்பிரிக்க இனவெறி அரசைக் கண்டித்துப் பேசியுள்ளார் என்ருல், அங்கு நடைபெற்றுவரும் அரசுக் கொடுமை நிலைகளின் தலைவிரி கோலம் எவ்வாறு இருக்குமென எண்ணிப் பாருங்கள்.

-செய்தி: வியன்.

தெரிந்துகொண்டு - எங்குப்போய் முட்டிக்கொள்வது ?

0 தமிழக அரசின் பரிசுச் சீட்டுகள் வெளிமாநிலங்களில் விற்பனையாவது உரு. 60,000-இற் குத்தான். —ஆனல் பிற மாநிலங்களின் பரிசுச்சீட்டுகள் தமிழ் நாட்டில் உரு. 150 கோடி அளவில் விற்கப்படுகின்றன.

அவ்வகை விற்பனை வருமானங்களும் பத்து பன்னிரண்டு 'மார்வாடிகளிடமே' கிடைக்கின்றன.

0 இந்தியத் துணைக்கண்டத்திலேயே அதிக அளவு திரைப்பட அரங்கு தமிழ் நாட்டில்தான் உள்ளது. ஏறத்தாழ 2740 திரையரங்குகள் உள்ளன.

0 அதேபோல் சாராயக்கடைகளும் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகம் ஏறத்தாழ 15,000 கடைகள் உள்ளன.

— வஞ்சிக்கப்படும் தமிழகம்' நாலிலிருந்து.

பாடிப் பாடி...!

தோழமை நெஞ்சங்களே !

'எழுதித் தேய்ந்தன விரல்கள்! என்ருலும் நெஞ்சு தேயாத நினைவலைகள். ஏன், நெஞ்சும் கழன்று ஓடி சிதறுமோ என்ற அச்சம். இத் தமிழினத்தின் அவலத்தை எண்ணிச் சாகும் நாள்கள். பாவலரேறு பற்றிய நினைவுகள் பற்றுகின்றன. எசி தழலாய் மேனி!

இங்கே, நாம் விளைநெல்லைத் தேடாமல் பதர்களைக் குற்றிக் கொண்டிருப்பதா ? "பாடிப் பாடிக் குற்றினலும், பதர் நெல்லாகுமா ?"

எண்ணிப் பார்க்கிருேம். இந்த நாட்டில் ஒரு மாற்றம் வருதல் வேண்டும். அதற்கான 'வகுப்பு, எது ?. 'பாட்டாளியை நாம் எப்படி 'இனம்' காண்பது ? அவனை இனம் கண்டாலன்ருே தீப்பொறி தோன்றும். இருள் காடு பற்றி எரியும்.

நாட்டுப் புறங்களையும் ஊடுருவி விட்ட நச்சுக் கருத்துகள். போபால் நச்சுக் காற்றையும் விடக் கொடிய பண்பாட்டுச் சாவுகள்! மக்களிடம் ஊடுருவிக் கிடக்கும் 'கையூட்டு'க் கசடுகள் ! சாதியிலும் பார்க்கப் 'பீடை'யாகிவிட்ட கொடுமைகள். மாந்தனை விலைக்கு வாங்கும் 'அடிமையை விலை தந்து பெறும் அவலத்தின் மறு வடிவம்தான் கையூட்டோ ?

கல்வியுய், அறமும் விலைப் பண்டங்களாகினவே. அவையும் முறையாக விலைப் பட்டியலில் வரவில்லை. அந்த 'விலை' தரவும் ஒரு தரகர், கையூட்டுப் பெற்றுத்தரும் கொடுமைகள் நாடெங்கிலும் !

இந்நிலையில், 'பாட்டாளி'களை எப்படி இனம் கண்டறிவது ? 'தமிழ்' பேசினுல் போதுமா ? 'தூய தமிழ்ப் பேச்சும் போதாதே. 'விஷம்' என்பதை நஞ்செனச் சொல்லிக் கலந்தளிக்கும் கருத்துகளை நாம் எதிர்த்துப் போரிடுதல் வேண்டும் !

ஒடுக்கப்பட்டு அடிமைப்பட்டுச் சாதியே ஒரு வகுப்பாக விளங்குகின்ற 'தோட்டி' போன்ற தொழிற் சாதியினர்களை நாம் 'பாட்டாளி' என்போமா? முன்னேறிய புரட்சியுணர்வு முளைவிடாமல் சாய்க்கடையில் புதைந்து கிடக்கும் இந்த வீரிய வித்துக்கள் விளைவுக்கு வருவது புதிய மாற்றத்திற்குப் பிறகன்ருே ஆகும் ?

சென்னை, மதுரை மாநகர் போன்ற எந்திரத் தொழிலாளர் 'பாட்டாளி' ஆவாரோ! இவர்கள் எல்லாம் வல்லரசியல் கொள்கை வழிப்பட்டவராகித் தன்னுணர்வு கெட்டுக் கிடக்கிருர்களே !

சிறிய தொழிற்கூடங்களில் 'அன்ருடம் காய்ச்சி'களாய் அலையும் இளைஞர்கள், பிழைப்புக்குக் 'கடத்தலில் உதவி', 'கையூட்டு' வேலைகளில் கவனம், ஏய்த்துத் திரிதல், செல்வர்க்குச் 'செருப்பாய்த் தேய்தல்' மூலம் கெடுகின்ருர்கள்.

திரைப்படக் 'கொட்டடி'களில் ஆடு-மாடுகளைப் போல அடைபடடுக் 'கலையை'த்துய்க்கும் ஆடவர்-பெண்டிர் இவர்களையெல்லாம் விட்டு விட்டுப் பாட்டாளிகளைப் பழுதற்றவர்களாக எங்கே கண்டு பிடிப்பது ?

ஓ, நெஞ்சங்களே! சோர்வைக் கைவிடுங்கள். உழைப்பிலும், விளைவிலும்-உருவக்கத்திலும் ஈடுபட்டுப் போராடும் வாழ்க்கையினரைக் கண்டறியுங்கள். அவர்களின் உழைப்பைத் திருடும், சுரண்டும் இந்த அமைப்பின் அவலத்தைச் சுட்டிக் காட்டுங்கள். ஒரு காசாயினும் விட்டுக் கொடுக்காமல் சண்டை பிடிக்கும் பண்பை ஆராய்ந்து தெரியுங்கள். உழவரை நாடுங்கள் !

போராட்ட வரலாறுகளை அவர்களுக்கு நினைவு படுத்துங்கள். தேசிய இன விடுதலைப் போரே இனி செய்யத்தக்கது என்பதைச் சுட்டிக் காட்டுங்கள்.

ஆங்கிலத்தில் படிக்கும் 'கொடுமைகளை'த் தமிழில் எடுத்துப் பரப்பினுல் சீற்றமடையும் அதிகார வெறியர்களை அம்பலப் படுத்துங்கள்.

தாயுடன் பேசத் தமிழ் மகனுக்கும், மகளுக்கும் தடையா என்று கொதித்தெழுங்கள்.

இதற்கெல்லாம் அமைப்பு வடிவம் தாருங்கள். அவற்றை ஒன்றிணையுங்கள். தமிழின இயக்கங்களைத் தேடி உறவு கொள்ளுங்கள். அவர்களிடம் காணும் குறைகளை நயமாகச் சுட்டிக்காட்டித் தட்டிக் கொடுதது நிறை காணுங்கள்.

கொடும் வெடிகுண்டுத் தகர்ப்புக்கும், வாழ்க்கை விடும் அறை கூவற்கும் அஞ்சாத தோழமை உள்ளங்களை தொடருங்கள் !

அன்பன்,

பறம்பை அறிவன்

அன்பர்கள் கவனிக்க...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5 மணிக்குமேல் முன் இசைவு பெற்று வருமாறு கேட்டுக்கொள்கிருேம்.

- அமைச்சர்

'அண்ணு !'

'என்ன தம்பி ?'

'அபிராமி அந்தாதி என்னும் நூலில் உள்ள பாடல்கள் எத்தனை அண்ணு ?'

"நூறு"

அந்தப் பாடல்களை மனப்பாடம் செய்தால், ஒவ்வொன்றும் ஒரு பலனைத்தரும் என்று எழுதிவைத்திருக்கிருர்களாமே !'

'ஆமாம். பிரிந்தவர் ஒன்றுசேர, உயர்பதவிகள் கிடைக்க, தீராத நோய்தீர உலகம் நமக்கு அடங்கி இருக்க, கடன் தொல்லை தீர, வறுமை ஒழிய, மக்கட்பேறு உண்டாக, பித்தம் தெளிய - என்று இப்படி ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு பலனைத் தருமாம்!'

'தாயுமானவர், பட்டினத்தார், இராமலிங்க அடிகள் போன்றவர்கள் பாடியிருக்கும் பாடல்களுக்கு இல்லாத பெருமை அபிராமி அந்தாதிக்கு மட்டும் எப்படி அண்ணு வந்திருக்கும் ?'

'நீயே சொல் தம்பி !'

'அபிராமி அந்தாதியை இயற்றிய அபிராமி பட்டர் என்பவர் ஒரு பார்ப்பனர் என்பதால் அவர் பாடலுக்கு அவ்வளவு பெருமை இருப்பதாக அவர்கள் எழுதி வைத்திருப்பார்களோ ?'

'எனக்குத் தெரியாது தம்பி !'

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். இதற்குள் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டுவிடும். பல நாடுகள் தமிழீழ நாட்டிற்கு ஏற்பிசைவு கொடுத்துவிடலாம். உலக நாடுகள் அவைக்குச் சிக்கலைக் கொண்டுபோகலாம். ஆனல், அதற்குள் அமைக்கப்பட்ட ஈழத்தமிழ் நாடு நிலை பெற்றுவிடும் சூழ்நிலைகள் உருவாகிவிடும்.

5. இந்திய அரசின் அரச தந்திரத்தைப் பொருத்தவரை, இந்தியப் படை நேரடியாக முதலில் தலையிடுவது நல்லது அன்று என்ற நிலை சரியாகத்தான் இருக்கும். ஏனெனில், இந்தியப் படை நேரடியாக இலங்கைத் தீவில் இறங்கினல், அமெரிக்கப்படை இலங்கைத் தீவிற்கு வரும்.

இந்தியப் படை முதலில் சென்றதால்தான், தங்கள் படை இலங்கைக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்காகச் சென்றுள்ளது என்று அமெரிக்க அரசு கூறும். அந்த நிலை, உலக நாடுகளின் கருத்து அவர்களுக்குச் சார்பாக அமைய ஏதுவாக அமையும்.

ஆனல் தமிழகத் தொண்டர் படை கமுக்கமாகச் சென்று போரிட்டால், அதைச் சாக்கிட்டு அமெரிக்கப் படை வராது. அப்படி வந்தால், உலகக் கருத்து அமெரிக்காவிற்குச் சார்பாக இருக்காது.

உலகக் கருத்தை மீறி அமெரிக்கப்படை இலங்கைக்கு வந்தால், இந்தியப் படை அதைக் காரணம் காட்டி இலங்கைக்குள் நுழையும்; இந்தியாவிற்கு ஆதரவாக உருசியப் படை பின்னல் வரும்.

மூன்ரும் உலகப்போர் மூளுவதுபோன்ற ஒரு சூழ்நிலை உருவாகும். உடனே உலக நாடுகள் எல்லாம் ஓடிவரும். ஞாயம் எது என்று கேட்கும். தமிழ் இனம் அழிக்கப்பட்ட கதையைக் கேட்டவுடன் அந்நாடுகளில் பல ஈழத்தமிழ் நாட்டை ஆதரிக்கும் நிலை ஏற்பட்டுவிடும்.

பெரும்பான்மையான நாடுகளின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டு, இலங்கைக்குப் படை உதவியை செய்து கொண்டிருக்க அமெரிக்கா முன் வராது. உலக நாடுகள் எல்லாவற்றையும் பகைத்துக் கொண்டு மூன்ருவது உலகப்போரை நடத்துவதற்கு முற்படவும் செய்யாது.

ஏற்படுத்தப்பட்ட தமிழ் ஈழ நாடு நிலை நிறுத்தப் பட்டு விடும்.

ஆகவே இந்திய அரசினர் முதலில் படையை அனுப்பிச் சிக்கலில் மாட்டிக்கொள்ள இசைய மாட்டார்கள். ஆனல் அமெரிக்கப் படை முதலில் வந்தால், கண்டிப்பாக இந்தியப் படை தலையிடும். ஏனெனில், அமெரிக்கப் படை இலங்கைக்கு வரக்கூடாது என்றுதானே இந்தியா கூறிக் கொண்டிருக்கின்றது.

தமிழ் நாட்டு மக்களுடைய உணர்ச்சி இந்திய அரசுக்குத் தெரியாதது அன்று. ஆனல் முதலில் சென்று சிக்கலில் மாட்டிக்கொள்ள விருப்பப்பட மாட்டார்கள்.

(தொடரும்)

தமிழீழ மக்களைக் காக்கப் படையை அமைப்போம்!

வியட்நாம் மக்களின் வீரம் செறிந்த விடுதலைப் போராட்டம்!

இந்தோ சீன பகுதியில் வடக்கே சீனவையும். மேற்கே லாவோசு எனும் சிறுநாட்டையும், தென் மேற்குப் பகுதியில் கம்பூச்சியாவையும் கிழக்கும் - தெற்கும் இந்துமா கடலையும் எல்லைகளாகக் கொண்டு, ஆசியாவில் ஒரு தனி நாடாக இருக்கிறது வியட்நாம்.

இரண்டாம் உலகப் போருக்கு முன்பிருந்தே பிரெஞ்சுக்காரர்களுக்கும், சப்பானியருக்கும், இதன் வழி அமெரிக்கர்களுக்கும் வேட்டைக் காடாகவும்; சுரண்டல் நாடாகவும் அடிமைப்பட்டுக் கிடந்த வியட்நாம் மக்கள் தங்கள் விடுதலைக்காக சிறு சிறு அளவில் கருவிப் போராட்டக் குழுக்களை அமைத்துக்கொண்டு, கொரில்லாப் போர் நடத்தியும், அற வழி முறைகளில் மக்களும் போராட்டங்கள் நடத்தியும் வந்தனர். 1945 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போரைப் பயன்படுத்திச் சிறு சிறு அளவில் இயங்கி வந்த போராட்டக் குழுக்களையெல்லாம் இணைத்து, வியட்நாம் மக்கள் விடுதலைப்படை (சைன்யம்) என்னும் ஒரே அமைப்பின்வழி நாட்டின் பெரும் பகுதிகளை, ஏறத்தாழ 10 இலக்கம் மக்கள் வாழும் 6 பெரிய மநிலங்களை மிக விரைவாகச் சப்பானியரின் ஆளுமையில் இருந்து விடுவித்து சூன் திங்கள் 4 ஆம் நாள் விடுதலையடைந்த நாடாக வெளி அறிவிப்புச் (பிரகடனம்) செய்து. அதன் நடவடிக்கையாக, ஆகஃசுடுத் திங்கள் 3 ஆம் நாள் இரவு நாடெங்கிலும் ஆளுமைக்காரர்களுக்கு எதிராக மக்கள் படையினரின் கருவிப் போராட்டம் முடுக்கி விடப்பட்டது.

இரண்டாம் உலகப்போரின் இறுதி நாளில் (1945 செப்டம்பர் 2 ஆம் நாள்) பாதின் என்னும் இடத்தில் 5 இலக்கத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஒன்று திரண்டு வியட்நாம் தந்தை என்னும் புகழ் வாய்ந்த மாபெரும் மக்கள் தலைவரான கோ-சி-மின் அவர்களை வியட்நாம் குடியரசுத் தலைவராக ஏற்றுக் கொண்டனர்; வியட்நாம் மக்கள் நடத்திய நீண்ட நெடிய விடுதலைப் போராட்டத்தின் விளைவாக வியட்நாம் விடுதலையையும், வியட்நாம் மக்கள் நாயகக் குடியரசு அமைப்பையும் அன்றே வெளியறிப்புச் (பிரகடனம்) செய்தார் தலைவர் கோ-சி-மின்.

இருப்பினும், இந்தோ சீன பகுதியில் தனது சுரண்டல் தன்மைகளை முற்றிலும் இழந்துவிட விரும்பாத பிரெஞ்சு வல்லரசு, 1946 ஆம் ஆண்டு திசம்பர் 19 ஆம் நாள், 1,00,000 பேர் கொண்ட ஒரு பெரும் படையை அனுப்பி, வியட்நாம் மக்கள் குடியரசுக்கு எதிராகப் போர் தொடுத்தது. இதைக் கண்டு வெகுண்டெழுந்த வியட்நாம் மக்கள் நாடெங்கிலும் பிரெஞ்சுப் படையினரை எதிர்த்துக் கடும் போரில் ஈடுபட்டனர். 1950 ஆம் ஆண்டு இறுதி வரை தொடர்ந்த இப் போரின் வெற்றி, வியட்நாம் மக்கள் பக்கமே இருந்துவந்தது. இதன் காரணமாகவும், உலகில் பல நாடுகள் வியட்நாம் மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்ததினாலும், அமைதியை விரும்பிய மக்கள் இயக்கங்கள் நடத்திய பேரணிகளும் பொதுக்கூட்டங்களும், பிரெஞ்சு மற்றும் அமெரிக்கர்களுக்கு எதிராகப் போட்ட கண்டனத் தீர்மானங்களின் பயனாகவும், வியட்நாம் மக்கள் படை முன் பிரெஞ்சுப் படையினர், எதிர்த்து நின்று வெல்ல முடியாத நெருக்கடியின் விளைவாகவும், இக் கொடிய போருக்கு முடிவுகட்ட வேண்டுமென பிரெஞ்சு உழைப்பாளர் கழகம் அரசுக்கெதிராகப்போராடியதன் நெருக்கடியாலும், இந்தோ சீன பகுதியில் அமைதியை நிலைநாட்டும் நிலைக்கு வல்லரசுகள் தள்ளப்பட்டன இதன் பயனாக, 1954 சூலைத் திங்களில் செனிவாவில் பிரெஞ்சு-வியட்நாம் அரசுகளுக்கிடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

எனினும், இப்போர் நிறுத்த ஒப்பந்தத்தை விரும்பாத, ஏற்காத அமெரிக்கா பிரெஞ்சு படைகளுக்குப் பின் வலுவாக இங்கிவந்த நிலையில் இருந்து, தானே நேரடி நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கியது தென்கிழக்காசியாவில் தேசிய இன விடுதலை இயக்கங்களை அடக்கி ஒடுக்குவதற்கு ஒரு படைத் தளமாகத் தெற்கு வியட்நாமைப் பயன்படுத்தும் நோக்கோடு, தனது வலிமை வாய்ந்த படைகளை அனுப்பித் தன் கைப்பொம்மைகளான அதிகாரிகள் சிலரைக்கொண்டு, ஒரு தன்னதிகார (சர்வாதிகார) படைத் (இராணுவ) துறை ஆட்சியைத் தெற்கு வியட்நாமில் நிறுவியது. 1960 ஆம் ஆண்டு வாக்கில், தென் வியட்நாம் முழுவதும் உள்ளடக்கி ஆளுமைக் குட்படுத்தியது. அமெரிக்கர்களின் இந்தகைய அட்டுதலுக்கெதிராகத் தேசிய விடுதலை முன்னணிப் பேராயம் கூடி விடுதலைக்கான வேலைத்திட்டத்தை வகுத்தளித்து, நடவடிக்கைகளிலும் ஈடுபட்டது. 1964 ஆம் ஆண்டுக்குள் மக்களின் பெரும் ஆதரவோடு விடுதலைப் படையினர் நாட்டின் பெரும் பகுதிகளை விடுவித்துப் பிரெஞ்சுக்காரர்களைச் சான்று காட்டி, அமெரிக்கர்களுக்கு எச்சரிக்கை விடுத்தனர். பிரெஞ்சுக்காரர்களைப் பின்பற்றி நாட்டைவிட்டு வெளியேறக் கட்டளையிட்டனர். ஆனால் கட்டளைக்குக் கட்டுப்படாத அமெரிக்கா மக்கள்மீது நேரடியான போர் அறிவிப்புச் செய்து ஏழாவது கப்பற் படையை அனுப்பித் தாக்குதல் தொடுத்தது வியட்நாமில் அமெரிக்கப் படை. வலுப்படுத்தப்பட்டது. 1964 இல் 23,000 படை வீரர்களைக் கொண்ட அமெரிக்கா, 1968 இல் 5,49,000 படை வீரர்களாகக் கூடுதல் ஆக்கியது.

வீரம் மிக்க வியட்நாம் மக்களை, அடிமைப்படுத்த அமெரிக்கா தனது வலிமை அனைத்தையும் கூட்டியும் காட்டு விலங்காண்டித்தனமான முறையிலும், கடுமையான தாக்குதலைத் தொடங்கி நேரடியான போரை முடுக்கிவிட்டது. இந்தப பெரும் போரில் அமெரிக்க வானூர்திகள் ஓர் இலக்கம் கல்லெடை (டன்) யுள்ள நச்சுப் பொருள்களைத் தூவியதன் கொடுமைக்கு 2 இலக்கம் ஒன்றுமறியா வியட்நாம் மக்களும், 50 ஆயிரம் அமெரிக்கப் போர் வீரர்களும் பலியாயினர். வளம் கொழிக்கும் காட்டுப் பகுதிகளும், சாகுபடி நிலங்களும அமெரிக்காவால் வீசப்பட்ட 80 இலக்கம் குண்டுகளால் பாலைநிலமாக்கப்பட்டது. இது நீங்கலாகப் பெரும் தொழிற்சாலைகளும், மின் நிலையங்களும், தொடர்வண்டி நிலையங்களும், போக்குவரத்துப் பாலங்களும், அணைக் கட்டுகளும், 3,000 பள்ளி-கல்லூரிக் சட்டிடங்களும், 350 மருத்துவமனைகளும் முற்றாக அழிக்கப்பட்டதுடன், வியட்நாம் மக்கள் கொலை, கொள்ளை கற்பழிப்பு பஞ்சம், பசி போன்ற கடும் கொடுமைகளுக்கு உட்பட்டு, அனைத்து வாழ்வியல் நிலைகளும் சீர்குலைந்து அல்லோலகல்லோலப் பட்டு, விளக்க வியலாத துன்பங்களையும், துயரங்களையும், தொல்லைகளையும் நெஞ்சில் ஏந்தியதோடு துயரம் தாளாமல் இறுதியில் அடிபணிந்து அடிமை முறி எழுதிக்கொடுத்து விடுவார்கள் என எண்ணி மேற்கண்ட கொடுமைகளை வியட்நாம் மக்கள்மீது ஈவு இரக்கமின்றிச் செய்தனர் அமெரிக்கர்கள். ஆனால் அவர்கள் எண்ணத்தில் மண்ணைப் போடும் முறையில் கொடுமையாளர்களுக்கு எதிராக அனைத்து மக்களும் வெகுண்டெழுந்து. கையில் கிடைத்த கருவிகளை எடுத்துக்கொண்டு அஞ்சாமல், அயராமல் தாக்குதல்களை முறியடித்து முன்னேறி வரும் முறையில் கடுமையாகப் போரில் ஈடுபட்டு, அமெரிக்கப் படை வீரர்களை விரட்டி அடித்தனர்.

மலை குலைந்தாலும் நிலை குலையாத வீரம் மிக்க வியட்நாம் மக்களின் தீரம் மிக்க விடுதலைப் போராட்டத்தையும், தணியாத விடுதலை வேட்கையையும், நெஞ்சுத் துணிவான மறத் தன்மையையும், தாய் நாட்டின்மீது வைத்திருந்த தீராத நாட்டுப்பற்றையும், மொழி உணர்வையும் கண்டு சில பொதுவுடைமை நாடுகளும் வியட்நாம் மக்களுக்குப் பல வழிகளிலும் துணை நின்றன. இறுதியாக வியட்நாம் மக்களின் உறுதியான நம்பிக்கையும், நயன்மையான விடுதலைப் போராட்டமும் வென்றன. 1975 ஆம் ஆண்டு அமெரிக்கப் படை முற்றாக விரட்டியடிக்கப்பட்டது. மக்கள் எழுச்சியால் இந நிலவுலகில் மாபெரும் புரட்சிகளை நடத்திக்காட்ட முடியுமென, உலகில் சுரண்டல் பிரிவு வல்லரசுகளுக்கு அடிமைப்பட்டும், அடக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் கிடக்கும் மக்களுக்கு அறைகூவல் விடுத்து அழைப்பு விடும் முறையில், முற்றாளுமை நாட்டின் முழுதாளும் மீநாக்கத்தின் கொடிய அடக்குமுறைகளுக் கெதிராக வீறுகொண்டெழுந்த வியட்நாம் மக்கள் நடத்திய வீரம் செறிந்த விடுதலைப் போராட்டம், 1975 ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 30 ஆம் பக்கல் வெற்றிபெறறு வாகைசூடி, ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் புத்துணர்ச்சியையும், புதிய எழுச்சியையும், மக்கள் கிளர்ந்தால் வெற்றி உறுதியெனும் நம்பிக்கையையும் ஊட்டின !

வாழ்க! வியட்நாம் மக்கள் !!

வெல்க!! மககள் போராட்டம் !!!

—வியனரசு.

இந்தியாவின் இரண்டாந்தரக் குடிமக்களாம் நாம்...! தமிழகக் கால்பந்தாட்ட வீராங்கனை கோமதி பொங்குகிறர் !

மேலையப்பைதிரம் (உத்திரப் பிரதேசம்), நடுவண் பைதிரம் [மத்தியப்பிரதேசம்], ஒரிசா போன்ற வட இந்திய மாநிலங்களில் பயணம் செய்தபோது பலமுறை நேர்ந்த கசப்பான பட்டறிவு இது.

வடக்கத்தியர்களுக்கு, நம்மவர்களைக் கண்டாலே இளக்காரம். 'இந்தி தெரியாதா உங்களுக்கு? அப்போது நீங்கள் இந்தியர்களே இல்லை' என்று முகத்தில் அடித்தாற்போல் கூறிவிடுகிறர்கள். தொடர்வண்டிகளில் பதிவு செய்யப்பெற்ற பெட்டிகளில் ஏறிக்கொண்டு இடம் பிடித்து ஆர்ப்பாட்டம் செய்வதிலும், தென்மாநிலப் பெண்களைக் கிண்டல் செய்வதிலும், கல்லூரி மாணவர்கள், பணி செய்பவர்கள் என்ற வேறுபாடே இல்லாமல் எல்லாரும் ஒன்றுபோலவே நடந்து கொள்கின்றனர். இனி படிக்காதவர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அண்மையில் ஒரு தொடர்வண்டிப் பயணத்தின் போது 'தெற்கினுல்தான் இந்தியநாடு முன்னேறவே இல்லை' என வட இந்தியன் ஒருவன் சொல்ல, எங்கள் பெட்டியில் இருந்தவர் அவரிடம் சண்டைக்குப் போக, பெரிய குழப்படியே நடந்தது. ஒரே நாட்டிலேயே இரண்டாந்தரக் குடிமக்களாகக் கருதப்படும் நாம், வேற்று நாடான இலங்கையில் உள்ள நம்மவர் உரிமையைப் பற்றி வாய் கிழயப் பேசுவதை நினைத்தால்.........

'தினமணிக்கதிர்' இதழிலிருந்து.

இருக்கின்ற குமுகாய அமைப்பில் சிறுவர்கள் சிறைச்சாலைகளை .நிரப்பாமல் என்ன செய்வார்கள் ?

வறுமையின் காரணமாக இந்தியாவில் இளம் குற்றவாளிகள் நாளுக்கு நாள் அதிகமாகச் சிறைச்சாலைகளில் அடைக்கப்படுகின்றனர். அண்மையில் 'சிறைச்சாலைகளில் சிறுவர்கள்' என்ற தலைப்பில் வெளி வந்துள்ள செயதி வழி, 1,000-த்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள், இந்திய சிறைச்சாலைகளில் வாடி, வதங்குவதாகத் தெரிய வந்துள்ளது. அதுவும் பொதுவுடைமையாளர்கள் ஆட்சி நடக்கும் மேற்கு வங்கத்தில் தான் அதிகமான சிறுவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். அஃதாவது, 420 சிறுவர்கள் வங்கத்தில் மட்டும் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர். மற்றவர்கள் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களின் சிறைகளில் வாடி, வதங்குகின்றனர். இந்தச் சிறுவர்கள் குற்றவாளிகளாக ஆவதற்கு வறுமையின் கொடுமையே காரணம் எனக்கூறும் அரசு, சிறுவர்களைச் சிறைகளில் அடைப்பதில் காட்டும் அக்கறை, வறுமையை விரட்டுவதில் காட்டவில்லை. இப்படிப்பட்ட குமுகாய அமைப்பில் பசித்த வயிற்றை நிரப்ப முடியாத சிறுவர்கள் சிறைச்சாலைகளை நிரப்புகின்றார்கள் போலும். -வியன்.

விடுதலைப் பெற்றது அருபா

மண் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கிற இனங்களில் அருபாவைப்பற்றி நாம் கடந்த தமிழ்நிலத்தில் பார்த்திருப்போம். நெதர்லாந்து ஆட்சிக்குட்பட்டு அடிமைப்பட்டிருந்த அருபா சனவரி 1-ஆம் பக்கல தனி நாடாக மலர்ந்தது. 70 ஆயிரம் மக்கள் தொகை கொண்டதும், 195 சதுர அயிரமாத்திரி (கி.மீ.) கொண்டதும் அந்நாடு

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். [இதழ் எண்: 69] பதிவு எண். TN/MS (C)657

அனுப்புதல்: தமிழ் நிலம், 5. அருணசலத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5

பெறுநர். திரு/திருவாட்டி

தூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்.
கழக அருட்கொடையாளர்கள்: தென்மொழி ந. முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனர்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணசலத் தெரு, சென்னை-5.